ந.க.எண்:பி.இ4/2649/2020
நாள்:22.09.2020

மாவட்ட ஆட்சியரகம் (சத்துணவு)
கள்ளக்குறிச்சி

# பத்திரிக்கைசெய்தி

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ், ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் காலியாக உள்ள சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு தகுதியுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

**சத்துணவு அமைப்பாளர், சமையலர் மற்றும் சமையல் உதவியாளர் பணியிடங்களுக்கு பெண்கள் மட்டுமே விண்ணப்பிக்கவேண்டும்.**

| | | |
|---|---|---|
| **சத்துணவு அமைப்பாளர் பணியிடத்திற்கானதகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு(**General**) மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி-10ஆம் வகுப்பு தேர்ச்சி.<br>வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலின பழங்குடியினர்**(S.T)** | 8ஆம் தேர்ச்சி(அ) தோல்வி பெற்றிருக்க வேண்டும்.<br>18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| தூரம் | | விண்ணப்பிக்கும் காலிபணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையேயான தூரம் 3 கி.மீக்குள் இருத்தல் வேண்டும். |
| **சமையலர் பணியிடத்திற்கான தகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு(**General**) மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி-8ஆம் வகுப்பு தேர்ச்சி/ தோல்வி<br>வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலின பழங்குடியினர்**(S.T)** | எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்.<br>18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| தூரம் | | விண்ணப்பிக்கும் காலிபணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையேயான தூரம் 3 கி.மீக்குள் இருத்தல் வேண்டும். |
| **சமையல் உதவியாளர் பணியிடத்திற்கான தகுதிகள்** | | |
| 1) | பொதுப்பிரிவு(**General**) மற்றும் பட்டியல் இனத்தவர் **(S.C)** | கல்வித் தகுதி-5ஆம் வகுப்பு தேர்ச்சி அல்லது தேர்ச்சி பெறாதவர்கள்<br>வயது - 21 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்க வேண்டும். |
| 2) | பட்டியலினபழங்குடியினர்**(S.T)** | எழுதபடிக்க தெரிந்திருக்கவேண்டும்.<br>18 வயது பூர்த்தியடைந்தும் 40 வயதுக்கு மிகாமலும் இருக்கவேண்டும். |
| தூரம் | | விண்ணப்பிக்கும் காலிபணியிடத்திற்கும், விண்ணப்பதாரர் குடியிருப்புக்கும் இடையேயான தூரம் 3 கி.மீக்குள் இருத்தல் வேண்டும். |

Scanned with CamScanner

வயது வரம்பு 01.07.2020 அன்றைய தேதியின்படி, **விதவைகள் மற்றும் கணவரால் கைவிடப்பட்டோருக்கு 20 வயது முதல் 40 வயதிற்குட்பட்டும், மாற்றுத்திறனாளிகளுக்கான உச்சவரம்பு 43 வயது வரையிலும் இருக்க வேண்டும்.**

காலிப்பணியிடங்கள் மற்றும் அதற்கான இடஒதுக்கீடு உள்ளிட்ட விவரங்களை சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் தெரிந்துகொள்ளலாம். **30.9.2020 மாலை 05.00 மணி** வரை தகுதியுடைய நபர்கள் நேரடியாகவோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் விண்ணப்பிக்கலாம். 30.09.2020 மாலை 05.00 மணிக்குபின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**கல்வி, சாதி மற்றும் தூரச்சுற்றளவு நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத. தகுதியற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தகுதி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மட்டும் நேர்முகதேர்வு நடைபெறும் நாள் விவரம் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்படும்.**

பூர்த்தி செய்த விண்ணப்பத்துடன் கல்வித் தகுதி சான்றிதழ், வயதுசான்றிதழ், சாதிச் சான்றிதழ், குடும்பஅட்டை, இருப்பிடச் சான்றிதழ், மாற்றுத்திறனாளி சான்றிதழ் அல்லது அடையாள அட்டை மற்றும் விதவை மற்றும் கணவரால் கைவிடப்பட்டவராயின் அதற்கான சான்றிதழ்களின் சான்றொப்பம் செய்யப்பட்ட நகல் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

மேற்கண்ட சான்றிதழ்களில் இருப்பிடத்திற்கு ஆதாரமாக ஏதேனும் ஒரு சான்றினை இணைக்க வேண்டும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றிதழ்கள் கட்டாயம் அளிக்கப்பட வேண்டும்.

இந்நேரடி நியமன நடவடிக்கைகள் அனைத்தும் மாவட்ட நிர்வாகத்தின் இறுதி முடிவுக்கு உட்பட்டவையாகும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்,
கள்ளக்குறிச்சி.

29.9.2020
PA CN MP)